**02.08.2024**

**O.S.No. 361/2022**

**PW.1 - அருண்காந்தி**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் என்ன வேலை செய்கிறேன், வியாபாரம் செய்கிறேனா என்றால் ஓசூர் அசோக் லைலாண்ட் நிறுவனத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் சுமார் ரூ.70,000/-. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு 23.04.2020 அன்று ரூ.10,00,000/- கடன் கொடுத்தது பற்றி என் வருமான வரி கணக்கில் காட்டியிருக்கிறேனா என்றால் காட்டியிருக்கிறேன். அந்த ஐ.டி. ரிட்டன் நீதிமன்றத்தில் இவ்வழக்கிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 புரோநோட்டில் 1வது சாட்சி ஸ்ரீனிவாசன், 2வது சாட்சி என் தாய்மாமன் சந்திரசேகரன் என்றால் சரிதான். மேற்படி புரோநோட்டை எழுதியது என் அண்ணன் மோகன் என்றால் சரிதான். தாவா புரோநோட்டின் பின்புறம் ரூ.25,000/- வாங்கியதாக மேலொப்பம் செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் சாட்சிகள் எவரும் கையொப்பமிடவில்லை, அதை எழுதியது யார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கிருஷ்ணனை எனக்கு எப்படி தெரியும் என்றால் உறவினர், மாமா முறையில் உறவு. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் காலத்தில் பிரதிவாதியின் வயது 75 என்றால் சரியாக தெரியவில்லை. நான் ரூ.10,00,000/- பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லும் தொகையை ரொக்கமாக கொடுத்தேனா, காசோலையாக கொடுத்தேனா, வங்கி மூலம் பரிவர்த்தனை செய்தேனா என்றால் ரொக்கமாக கொடுத்தேன். எந்த ரூபாய் நோட்டுக்களாக (denomination) கொடுத்தேன் என்றால் ரூபாய் இரண்டாயிரம் நோட்டுக்களாக கொடுத்தேன். எங்கு வைத்து கொடுத்தேன், பணம் கொடுக்கும் போது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் பிரதிவாதியின் வீட்டருகில் வைத்து கொடுத்தேன். குறிப்பாக கேட்ட போது பிரதிவாதியின் வீட்டு முன்பாக வராண்டாவில் வைத்து கொடுத்ததாகவும், அப்போது சந்திரசேகர், ஸ்ரீனிவாசன் இருந்ததாக சொன்னார். அன்றைய தேதியில் தான் இந்த புரோநோட் எழுதப்பட்டதா என்றால் ஆம், பணம் கொடுக்கும் போது தான் எழுதப்பட்டது. பிரதிவாதி கிருஷ்ணனுக்கு பலேப்பள்ளி கிராமத்தில் 1 ஏக்கர் 70 சென்ட் இடம் சொந்தமாக உள்ளது என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் சாட்சி கையெழுத்து போட்டிருக்கும் என் தாய்மாமா சந்திரசேகருக்கு பிரதிவாதியின் நிலத்தை ஒட்டி நிலம் உள்ளது என்றால் சரியல்ல, மற்றொருவரின் நிலத்திற்கு அடுத்து உள்ளது. என் மாமா சந்திரசேகர், பிரதிவாதி

கிருஷ்ணனின் நிலத்தை வாங்குவது குறித்து பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தீர்ப்பிற்கு முன் பற்றுகை கோரி தாக்கல் செய்துள்ள மனுவில் மேற்சொன்ன நிலம் தவிர பிரதிவாதி கிருஷ்ணனின் சொத்துக்கள் என்று பல சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன என்றால் சரிதான். இந்த வழக்கில் வெங்கட்ராஜ் என்பவர் ஒரு வழக்கிடை மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி வெங்கட்ராஜிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த சொத்துக்களையும் சேர்த்து மேற்படி வழக்கிடை மனுவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாய்மாமா சந்திரசேகர், பிரதிவாதி கிருஷ்ணனின் நிலத்தை அபகரிக்க வேண்டி என் மூலமாக மோசடியாக பிரதிவாதியின் கையொப்பமிட்டது போல் தாவா புரோநோட்டு எங்களால் உற்பத்தி செய்யப்பட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் ரூ.10,00,000/- பிரதிவாதி தரவேண்டியது குறித்து பிரதிவாதிக்கு என் தரப்பில் வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு ஏதும் அனுப்பப்பட்டதா என்றால் ஆம், நான் சொன்னமாதிரி வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் தாவாவிற்கு முன்னர் அனுப்பவில்லை என்றும், அவ்வாறு அனுப்பப்பட்டிருந்தால், அதனை தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது அந்த சட்ட அறிவிப்பின் நகலை தான் தாக்கல் செய்ய முடியும் என்றார். கடன் வாங்கியதாக சொல்லும் தேதியிலிருந்து பிரதிவாதிக்கு எதிராக சுமார் 2 1/2 வருடங்கள் கழித்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கேட்கும் போது அவர் பணம் கொடுத்துவிடுவதாக சொன்னதால் மேற்படி தாமதம் ஏற்பட்டது. உண்மையாக கடன் கொடுத்திருந்தால் அதனை திரும்ப பெறுவதற்கு சட்டபடியான நடவடிக்கைகளை சரியாக எடுத்திருப்பேன் என்றும், மோசடியாக புரோநோட் தயாரிக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாலேயே உரிய நடவடிக்கைகள் சட்டபடி எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மோசடியாக தயாரிக்கப்பட்ட தாவா புரோநோட்டின் பேரில் என் தாய்மாமன் பிரதிவாதியின் நிலத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA
Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal District Judge,
Krishnagiri.